## விவிலியப் பணிக்குழு செய்திகள்

**06.09.2024** அன்று நமது அருள்பணி மையத்தில் செப்டம்பர் விவிலிய மாத தொடக்க விழா மற்றும் சிறப்பு திருப்பலியை விவிலிய பணிக்குழு சிறப்பித்தது. சிறப்பு விவிலிய பவனி ஏற்பாடு செய்யப்பட்டது. அருட்பணி மைய அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் திருவிவிலியம் இறை வார்த்தை பதாகை மற்றும் மெழுகுவர்த்தி கையில் ஏந்தி பவனியில் பங்கு கொண்டார்கள். நல்லாயன் சுருபத்தின் முன்னிலையில் சிறிய மேடை அமைத்து மரத்தால் ஆன பெரிய விவிலியத்தை அரங்கேற்றம் செய்து வைக்கப்பட்டது. அருட்பணி மைய இயக்குனர் அருள்தந்தை ஜோசப் ஜெயக்குமார், அருள் சகோதரிகள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் இந்நிகழ்வுகளில் பங்கு கொண்டார்கள். பங்கு கொண்ட அனைவருக்கும் பொது மொழிபெயர்ப்பு திருத்திய பதிப்பு திருவிவிலியம் பரிசாக விவிலிய பணிக்குழுவால் வழங்கப்பட்டது. அனைவரின் கரங்களிலும் திருவிவிலியம் ஏந்திய வண்ணம் ‘‘விடியலிலும் விவிலியமே இரவு முடிவிலும் விவிலியமே’’ முழக்கங்கள் இடப்பட்டது. தினமும் இறை வார்த்தை வாசிக்க இறை வார்த்தையின் வல்லமை பற்றி பணிக்குழு செயலர் அருட்பணி எட்வர்ட் அந்தோணி ராஜ் அவர்கள் மறைவுரை நிகழ்த்த அருள் தந்தை ஜோசப் ஜெயக்குமார் அவர்கள் திருப்பலி தலைமையேற்று வழி நடத்தினார்கள்.

**08.09.2024** அன்று பொதுநிலையினருக்கான ஓர் ஆண்டு சான்றிதழ் விவிலியப் பட்டயப் பயிற்சியின் **(2024–2025)** மூன்றாம் மாதத்திற்கான வகுப்பு காலை **9.30** மணி முதல் மாலை **4.30** மணி வரை நடைபெற்றது. விவிலியப் பேராசிரியர் அருள்தந்தை ரீகன் அவர்கள் "ஞான நூல்களுக்கு" விளக்கமளித்தார்கள். அன்னை மரியாவின் பிறந்த நாளை முன்னிட்டு வகுப்பில் அன்னையின் பெயர் கொண்ட அனைவருடன் அருள்தந்தையர்கள் மற்றும் விவிலியப் பணிக்குழுவின் தன்னார்வ தொண்டர்கள் இணைந்து கேக் வெட்டி வாழ்த்துக்களை மகிழ்வுடன் பகிர்ந்துகொண்டார்கள். அதனைத் தொடர்ந்து திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இப்பயிற்சி வகுப்பில் **90** நபர்கள் பங்குபெற்றார்கள். அன்றைய தினம் விவிலிய பணிக்குழுவின் தன்னார்வ தொண்டர்களுக்கான மாதாந்திர கூட்டமும் நடைபெற்றது.

**08.09.2024** அன்று **“Read Bible in 2024”** இணைந்து ஆங்கிலத்தில் ESV-CE (English Standard Version-Catholic Edition) திருவிவிலியத்தை முழுமையாக வாசிப்பவர்களுக்கான ஏழாம் மாதத் தேர்வு கூகுள் படிவத்தின் வழியாக நடைபெற்றது. இதில் **78** நபர்கள் தேர்வில் பங்கேற்றார்கள். இவர்களுக்கு **13.10.2024** அன்று **8**வது தேர்வு நடைபெறவுள்ளது.

### விவிலியக் கண்காட்சி மற்றும் புத்தக நிலையம்

**15.09.2024 –** குழந்தை இயேசு திருத்தலம் – கிண்டி

**22.09.2024 –** அன்னை வேளாங்கன்னி ஆலயம் – மாத்தூர்

**22.09.2024 –** புனித தெரேசா ஆலயம் – நுங்கம்பாக்கம்

29.09.2024 – நற்கருணை நாதர் ஆலயம் – திருமுல்லைவாயில்

29.09.2024 – ஆரோக்கிய அன்னை ஆலயம் – சின்னமலை

29.09.2024 – புனித அந்தோணியார் ஆலயம் – டி.ஜி. அண்ணாநகர்

விவிலிய மாதத்தை முன்னிட்டு ‘‘மாபெரும் விவிலிய வினா–விடை போட்டி 2024’’ சென்னை–மயிலை உயர்மறைமாவட்டத்தைச் சார்ந்த பங்குமக்களுக்கு 22.09.2024 அன்று திருவள்ளூரில் நடைபெற்றது. **செக்கரியா, ஒசேயா, மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் மற்றும் எபேசியர் ஆகிய நூல்களிலிருந்து 175** கேள்விகள் படித்து தயாரிக்கும்படி முன்கூட்டியே கொடுக்கப்பட்டது. கொடுக்கப்பட்ட 175 கேள்விகளிலிருந்து 100 கேள்விகள் தேர்வுக்கு கொடுக்கப்பட்டது. திருவள்ளூரில் 169 நபர்கள் தேர்வில் பங்குகொண்டார்கள். போட்டியில் பங்கேற்றவர்களுக்கும் அவர்களைக் ஊக்கப்படுத்திய அனைத்து அருள்தந்தையர்களுக்கும் விவிலியப் பணிக்குழுவின் நெஞ்சம் நிறைந்த நன்றிகள். சிறப்பாக போட்டிக்குத் தேவையான இடமளித்து அனைத்து வகையிலும் உதவிப் புரிந்த திருவள்ளூர் மறைவட்ட முதன்மைகுரு அருட்தந்தை கிளமண்ட் பாலசாமி அவர்களுக்கும் அருள்சகோதரர் இம்மானுவேல் மற்றும் பங்கு இளையோர் குழுவினர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள். மேலும் அனைத்து வகையிலும் உதவி புரிந்துவரும் எமது விவிலியப் பணிக்குழுவின் தன்னார்வ பணியாளர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

**செயலர்**

**அருள்பணி. எட்வர்ட் அந்தோணி ராஜி**